# யஸீத் பின் முஆவியா (ரழி) பற்றிய விமர்சனப் பார்வை

## எம்.ஜே.எம். ரிஸ்வான் மதனி M.A. (Cey)

-------------------

அல்லாஹ்வுக்வே அனைத்துப் புகழும். இறுதித்தூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் மீதும் அவர்களின் தோழர்கள், நல்லடியார்கள் அனைவர் மீதும் அல்லாஹ்வின் சாந்தியும் நல்லாசியும் உண்டாகட்டுமாக!



இஸ்லாத்தின் விரோதிகளாலும் இஸ்லாமிய பெயர்தாங்கிளாலும் இஸ்லாமும், அதன் தூய போராளிகளும் உண்மைக்குப் புறம்பாக விமர்சனம் செய்யப்படுவதே வரலாறு.

குறிப்பாக இஸ்லாத்தின் பெயரில் வாழ்கின்ற யூத சிந்தனையில் முளைத்த ஷீஆக்களால் நபியின் மனைவியரும், அவர்களின் அருமைத் தோழர்களும், அஹ்லுஸ்ஸுன்னா முஸ்லிமகளும் இன்றும் உண்மைக்குப் புறம்பாக விமர்சனம் செய்யப்படுவதைப் பார்க்கின்ற போது இதில் இஸ்லாமியப் பெயர் தாங்கிகளான ஷீஆக்களின் பங்களிப்பு அளப்பெரியது என்பதை மறுக்க முடியாது.

அதன் தொடரில்தான் வஹி எழுதுவோரில் ஒருவரான முஆவியா பின் அபூசு.ஃப்யான் (ரழி) அவர்களும், அவர்களின் புதல்வர் யஸீத் அவர்களும் அஹ்லுஸ்ஸுன்னா முஸ்லிம்களும் வழிகெட்ட ஷீஆக்களால் உண்மைக்குப் புறம்பாக விமர்சிக்கப்பட்டுள்ளனர்.

யஸீத் பற்றி அவர் மதம் மாறிய ஒரு முர்தத், கா.ஃபிர் என்று ஒரு பிரிவினரும், இல்லை அவர் ஒரு வழிகேடர் என்று மற்றொரு பிரிவினரும், இல்லை இல்லை அவர் பரிசுத்தமான ஒரு மனிதர் என்று இன்னொரு சாராரும் தமது விமர்சனத்தை வெளியிட்டுள்ளனர்.

யஸீத் பின் முஆவியா அவர்கள் அஹ்லுஸ்ஸுன்னாக்களில் ஒருவராக இருப்பதைக் காரணமாகக் கொண்டு இதன் உண்மை நிலை என்ன? என்பது பற்றி அஹ்லுஸ்ஸுன்னா முஸ்லிம்களாகிய நாம் அறிந்திருப்பது கலாத்தின் தேவையாகும். அதனைக் கருத்தில் கொண்டு யஸீத் பின் முஆவியா (ரழி) அவர்கள் பற்றி இங்கு சுருக்கமாக எழுதப்படுகின்றது.

## யஸீத் பற்றிய அறிமுகக் குறிப்பு

யஸீத் அவர்கள் உஸ்மான் பின் அ.:.ப்பான் (ரழி) அவர்களின் காலத்தில் நபித்தோழர் முஆவியா (ரழி) அவர்களுக்கு மகனாகப் பிறந்தார். இவர் நபியின் காலத்தை அடைந்தவர் கிடையாது. அவர் நபித்தோழரும் இல்லை. மார்க்கம், சீரிய பண்பாடு போன்றவற்றைக் கொண்டு அவர் பெரிய அளவு பிரசித்தி பெற்றவருமில்லை. அவர் முஸ்லிம் இளைஞர்களில் ஒருவராக இருந்தார். அவர் கா.:.பிர் நிலையிலோ, அல்லது (ஸின்தீக்) மார்கத்தைச் சீரழிப்பவராகவோ, அல்லது முனா.:.பிக்காகவோ இருக்கவில்லை.

மாற்றமாக முஸ்லிம் மன்னர்களில் ஒருவராக இருந்தார், முஸ்லிம்கள் சிலர் வெறுத்த நிலையிலும், சிலர் திருப்தி கண்ட நிலையிலும் அவர் ஆட்சிக்கு வந்தார். அவரிடம் வீரம், தயாளம் போன்ற உயரிய குணங்கள் காணப்பட்டன. அவரது எதிரிகள் குறிப்பிடுவது போன்று அவர் தீய நடத்தை உடையவராக இருக்கவுமில்லை. இவரது ஆட்சியில் பாரிய குழப்பங்கள் நடந்தேறின என்பது உண்மை. உஸ்மான் பின் அ.:.ப்பான் அவர்களின் கொலையும், யஸீதின் ஆட்சியில் நடந்த ஹுஸைன் (ரழி) அவர்களின் படுகொலையும் முஸ்லிம்கள் மத்தியில் பாரிய பிரிவினையையும், வழிகேட்டு சிந்தனைகளும் உருவாகக் காரணமான.

அதனால் யஸீத் மீது வெறுப்புக் கொண்டோர் அவரைக் காபிராகவும், நரகவாதியாகவும் பார்க்கின்றனர், அவர் மீது நேசம் கொண்டோர் அவரை வீரதீர செயலைப் புரிந்த வீரமகானாகப் பார்க்கின்றனர். இரு பார்வையும் தவறானதாகும் என இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள் குறிப்பிடுகின்றார்கள். ( 410 / 3) – مجموع الفتاوى

நபித்தோழர்களுக்கு அடுத்த படித்தரத் தாபியீன்களின் பட்டியலில் யஸீத்இடம் பெறுகின்றார். சிறந்த நூற்றாண்டில் இவரது பிறப்பு இருந்ததோடு பெரிய நபித்தோழர்கள் காலத்திலும் இவர் வாழ்ந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாகும்.

அறிவியல் பாரம்பரியத்துடன் நெருங்கிய தொடர்புடையவர்களாகக் காணப்பட்ட பெரிய நபித்தோழர்கள் வாழ்ந்த காலத்தில் யஸீத் பிறந்த காரணத்தினால் இவரிடம் இஸ்லாமிய அறிவுப் பின்னணி ஆழமாகக் காணப்பட்டுள்ளது என்பதே உண்மை.

இவரது தந்தை முஆவியா (ரழி) அவர்கள் இவரை இறையச்சம், நீதி, நற்குணம் போன்ற உயரிய பண்புடையவராக வளர்த்துள்ளார்கள் என்பதை பின்வரும் சம்பவத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

நீ ஆட்சிக்கு அமர்த்தப்பட்டால் எவ்வாறு நடந்து கொள்வாய் என அவரது தந்தையான நபித்தோழர் முஆவியா (ரழி) அவர்கள் கேட்டது போது

( كنت والله يا أبت عاملاً فيهم عمل عمر بن الخطاب ". ((ابن عاصم في الآحاد والمثاني ( **1 / 375** )

**بسند حسن.**

எனது தந்தையே! நான் அவர்களுடன் உமர் பின் கத்தாப் அவர்களைப் போன்று (நீதியாக) நடந்து கொள்வேன் எனப் பதில் அளித்தார். (இப்னு அபீஆஸிம், அல்ஆஹாத் வல்மஸானி) இதைக் கேட்ட முஆவியா (ரழி) அவர்கள்

**فقال معاوية: سبحان الله يا بني، والله لقد جهدت على سيرة عثمان فما أطقها، فكيف بك وسيرة عمر؟ [ابن كثير: 8/229].**

சுப்ஹானல்லாஹ்! என ஆச்சரியத்தை வெளிப்படுத்திய பின் என் அருமை மகனே! நான் உஸ்மான் அவர்களின் வழியிலாவது எனது ஆட்சியை அமைத்துக் கொள்ள முயற்சித்தேன். அது எனக்கு இயலாமல் போனது. உன்னால் எப்படி உமரின் ஆட்சியில் பயணிக்க முடியும் எனக் கேட்டதாக இமாம் இப்னு கஸீர் அவர்கள் **அல்பிதாயா வந்நிஹாயாவில்** குறிப்பிடுகின்றார்கள்.

முஆவியா (ரழி) அவர்கள் தனது மகன் யஸீதின் அறிவியல் வளர்ச்சிக்காக அரபு இலக்கண, இலக்கியத்துறையில் பிரசித்தி பெற்று விளங்கிய அறிஞரான தஃ்ஃபல் பின் ஹன்ளலா அஸ்ஸதூஸி அஷ்ஷைபானி (ம: ஹி:65) அவர்களை நியமித்து கல்வியைப் புகட்டினார்கள். குறிப்பாக குரைஷியர் தொடர்பான பாரம்பரிய வழக்காறு, வரலாறுகள் பற்றிய அறிவை யஸீத் இவரிடம் பெற்றார்.

முஆவியா (ரழி) அவர்கள் தனது மகன் யஸீதை சிறுபருவம் முதல் இஸ்லாமிய பயிற்சிப் பாசறையில் வளர்ப்பதில் மிகவும் ஆர்வம் காட்டினார்கள். யஸீத் தனது இளமைப் பருவத்தில் கிராமியச் சூழலில் வளர்ந்தன் காரணமாக அங்கு அரபு

இலக்கண இலக்கியங்கள், கவிதை புணைதல், குதிரைப் பயிற்சி, போர்ப் பயிற்சி, அடக்கம் , மனிதநேயம், மானுடம், இங்கிதங்கள், பண்பாடுகள், நற்பண்புகள் ஆகிய உயர் குணங்களை அங்கு கற்றுத் தேறினார்.

முஆவியா (ரழி) அவர்கள் ஹதீஸ்களை அறிவிக்கின்ற (ராவி) அறிவிப்பாளராக இருந்தமையால் தனது மகன் யஸீத் அவர்கள் தனது தந்தை மூலம் ஹதீஸ்களையும், வரலாறுகளையும் அறிவித்துள்ளார்கள் என இமாம் இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

அதே வேளை யஸீத் மூலம் அவரது புதல்வரான காலித் என்வரும் மர்வானின் மகன் அப்துல் மலிக் அவர்களும் ஹதீஸ்களையும் சில நிகழ்வுகளையும் அறிவித்துள்ளனர் என இமாம் இப்னு கஸீர் அவர்கள் அல்பிதாயாவில் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

பார்க்க:

1- تهذيب التهذيب لابن حجر

2- البداية والنهاية لابن كثير

**ஆட்சியில் அமர்தல்:**

அரசியல் காரணங்களை முன்னிறுத்தி நபித்தோழர்களின் கலீ∴பாத் தெரிவு பற்றி உண்மைக்குப் புறம்பாக விமர்சிக்கும் ஷீஆக்கள் குர்ஆன், ஹதீஸைக் குறைகாண பாலம் அமைத்துக் கொண்டது போன்று யஸீத் (ரஹ்) அவர்கள் மீது பொய்யுரைத்து முஆவியா (ரழி) அவர்கள் மீதும் அவரது நபித்துவ சகவாசத்தின் மீது அவநம்பிக்கை ஏற்படுத்த முயற்சித்தனர். அதில் பெரும்பகுதியில் வெற்றியும் கண்டனர். அதன் காரணமாகவே மார்க்க விபரமற்ற அஹ்லுஸ்ஸுன்னா மக்களிடம் யஸீத் பற்றிய அறியாமையும் ஷீஆக்கள் பரப்பிய கருத்துக்களும் வேறூன்றிக் காணப்படுகின்றது.

ஹி 60-ம் ஆண்டு தனது தந்தையின் வஸிய்யத்தின் பேரில் இளவராசர் யஸீத் அவர்கள் ஆட்சிபீடம் ஏறினார். ஆட்சி விமர்சனங்ளுக்கு உட்படிருந்தாலும், அப்போதைய நிலையில் அவரது தெரிவு ஆட்சியின் தேவையாக உணரப்பட்டது. அடுத்ததாக இவர் இந்தப் பதவிக்கு தகுதி உடையவராகவே இருந்துள்ளார்.

இது பற்றிய பன்முக இஸ்லாமிய ஆய்வாளரான கலாநிதி தாஹா திலமி அவர்கள் பின்வரும் இரு காரணிகளைக் குறிப்பிடுகின்றார்கள்.

1- சந்தர்ப்ப சூழல் அதை வேண்டி நின்றது,
2- அவர் அந்தப் பதவிக்குத் தகுதியுடையவராகக் காணப்பட்டார்.

## *யஸீதின் சிறப்பு*

யஸீத் தனது தந்தையும், நபித்தோழருமான முஆவியா (ரழி) அவர்களின் ஆட்சிகாலத்தில் ரோம் பேரரிசின் மீது போர் தொடுத்திருந்தார். ரோம் மீது முஸ்லிம்கள் பிற்காலத்தில் போர் தொடுப்பது பற்றிய பின்வரும் நபி (ஸல்) அவர்களின் ஆச்சரியமிக்க முன்னறிவிப்பில் யஸீத் (ரழி) அவர்கள் இடம் பெறுவதாக அறிஞர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

நபித்தோழர்களின் வரிசையை அடுத்த தாபியீன்களில் உள்ளவரான யஸீத் (ரஹ்) அவர்கள் பின்வரும் நபிமொழியில் வந்துள்ள சிறப்புக்குச் சொந்தக்காரர்களில் ஒருவராகவும் விளங்குகின்றார்கள்.

**أول جيش من أمتي يغزون البحر قد أوجبوا –أي: فعلوا فعلاً وجبت لهم به الجنة (أخرجه البخاري)**

எனது உம்மத்தில் கடல் மார்க்கமாக முதலாவது போர் செய்யும் படையினர் சுவனம் கட்டாயமாக்கப்பட்டவர்கள் (புகாரி) மற்றொரு அறிவிப்பில்: ‘அல்லாஹ்வால் பாவம் மன்னிக்கப்பட்டவர்களாக இருப்பார்கள் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்)

இது பற்றி விளக்குகின்ற இமாம் இப்னு ஹஜர் அல்அஸ்கலானி அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகின்றார்கள்.

**فِي هَذَا الْحَدِيثِ مَنْقَبَة لِمُعَاوِيَة لِأَنَّهُ أَوَّلُ مَنْ غَزَا الْبَحْرَ وَمَنْقَبَةٌ لِوَلَدِهِ يَزِيد لِأَنَّهُ أَوَّلُ مَنْ غَزَا مَدِينَةَ قَيْصَرَ ((فتح الباري لابن حجر – (9 / 89))**

இந்த ஹதீஸில் முஆவியா (ரழி) அவர்கள் பற்றிய சிறப்பு சுட்டிக்காட்டப்படுகின்றது. ஏனெனில் அவர்தான் கடல் மார்க்கமாக முதலாவது போர் செய்தவர். மேலும்

அவரது புதல்வராகிய யஸீத் அவர்களின் சிறப்பு பற்றியும் இங்கு கூறப்படுகின்றது. ஏனெனில் அவர்தான் (ரோம் மன்னன்) கைஸரின் நகர் மீது முதலாவது போர் தொடுத்தவர். அதாவது ஹி: 52- ல் (சில அறிவிப்புக்ளில் ஹி: 48-ல்) யஸீதின் படைகள் கொஸ்தான்தி நோபிளை வெற்றி கொண்டது. (ஃபத்ஹுல் பாரி)

கொஸ்தான்நோபிள் மீதான படை நகர்வின் தளபதியாக நபித்தோழர் بسر بن أرطأة புஸ்ர் பின் அர்தஆ (ரழி) அவர்கள் செயல்பட்டார்கள். இது முஆவியா (ரழி) அவர்களின் ஆட்சியில் நடை பெற்றதாகும்.

இந்தப் போரில் அபூஅய்யூபில் அன்ஸாரி, இப்னு உமர், இப்னு அப்பாஸ், இப்னுஸ்ஸுபைர், ஹுஸைன் பின் அலி (ரழி) போன்ற பெரிய நபித்தோழர்கள் இடம் பெற்றுள்ளனர். போரில் ஷஹீதாக்கப்பட்ட அபூஅய்யூபில் அன்ஸாரி (ரழி) அவர்கள் துர்கியில் அடக்கம் செய்யட்டுள்ளார்கள். ஹி: 48 -ல் நடந்ததாக வரலாற்று ஆய்வாரளர்களால் உறுதி செய்யப்படுகின்றது.

கொஸ்தான்தி நோபிளின் வெற்றியாளர்கள் அல்லாஹ்வின் பாவமன்னிப்பையும், சுவனத்தையும் பெறுவார்கள் என்று கூறப்பட்டது இதற்குக் காரணமாகக் கூறப்படுகின்றது.

இந்தச் சிறப்பை அடைய வரலாற்றில் பலர் முயற்சித்தார்கள். அவர்களில் முஆவியா (ரழி) அவர்கள் முதன்மையானவர். இதற்கான முயற்சி உஸ்மான் (ரழி) அவர்களின் காலத்தில் மேற்கொள்ளப்பட்டது. பின்னர் அவரது மகன் யஸீத் தந்தை முஆவியா (ரழி) அவர்களின் ஆட்சியில் முயற்சித்தார். அது அவர்களுக்கு சாத்தியமானது.

நபி (ஸல்) அவர்கள் இந்த முன்னறிவிப்பு பற்றி எடுத்துக் கூறிய போது உம்மு சுலைம் (ரழி அவர்கள் கடல்மார்க்கமான போரில் தானும் பங்கெடுக்க தனக்கு அல்லாஹ் அருள் செய்ய வேண்டி இறைத்தூதர் அவர்களிடம் வேண்டினார்கள். அது உனக்கும் கிடைக்கும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். இது முஆவியா (ரழி) அவர்களின் காலத்தில் நடந்தது. இந்தப் பெண் முஆவியா (ரழி) அவர்களின் காலத்தில் போருக்குச் செல்லத் தயாராகி ஒட்டகத்தின் மீதேறியதும் அதில் இருந்து விழுந்தார்கள். ஒட்டகம் அவரை மிதித்து அதனால் அவர்கள் மரணித்தார்கள் (புகாரி, முஸ்லிம்)

இதன் மூலம் முஆவியா (ரழி) அவர்களும், அவர்களின் மகன் யஸீத் அவர்களும் உண்மையான முஸ்லிம்கள் என்பதை இந்தச் சம்பவம் உணர்த்துகின்றது. இதை மறுக்கின்ற ஷீஆக்களின் வழிகேடு பற்றி நாம் அலட்டிக் கொள்ளலாகாது.

## ஹுஸைன் (ரழி) அவர்களை யஸீத் கொலை செய்தாரா?

யஸுத் ஹுஸைன் (ரழி) அவர்களைக் கொலை செய்ததாக ஆண்டாண்டு காலமாகக் கூறப்பட்டு வரும் கதை பற்றி அஹ்லுஸ்ஸுன்னாக்களாகிய நாம் அறிந்திருக்க வேண்டும்.

கவாரிஜ்களின் கிளர்ச்சி, மற்றும் அஹ்லுல் பைத்தினரே ஆட்சிக்குத் தகுதி பெற்றவர்கள் போன்ற உள்ளகக் குழப்பங்களால் முஸ்லிம் சமூகத்தின் கட்டமைப்பு சீர் குலைக்கப்பட்ட நிலையில் யஸீத் ஆட்சிக்கு வந்தார்.

**யஸீத் ஹி: 61ல் மன்னராக முடிசூடிக் கொண்டார்.** இவர் ஆட்சிக்கு தகுதி அற்றவர் என்ற கருத்து நபி (ஸல்) அவர்களின் பேரர் ஹுஸைன் அவர்கள் கண்டார்கள். ஈராக்கிலுள்ள கயவர்கள் சிலர் ஹுஸைன் அவர்களை ஈராக்கிற்கு வருமாறும், ஆட்சியைப் பிடிக்க தாம் அவர்களுக்கு உதவுவதாகவும் கடிதம் அனுப்பினார்கள். அதனால் ஈராக் சென்று ஆட்சியைக் கைப்பற்றும் எண்ணத்தில் ஹுஸைன் (ரழி) அவர்கள் புறப்பட்டுச் சென்றார்கள்.

இது பற்றி அறிந்த நபித்தோழர் இப்னு உமர் (ரழி) அவர்கள் அவரோடு இரண்டு நாட்கள் கூடவே சென்றார்கள். இரண்டு நாள் கழித்து ஹுஸைன் அவர்களை நோக்கி நபியின் மகளின் மகனே! நபியின் பேரரே! ஈராக்கிய ஷீஆக்கள் உங்களுக்கு உதவி செய்யமாட்டார்கள். அங்கு செல்லாதீர்கள் உங்கள் பாட்டனார் முஹம்மத் நபி (ஸல்) அவர்களுக்கு உலகம், மறுமை இரண்டில் ஒன்றைத் தெரிவுசெய்ய அனுமதிக்கப்பட்ட போது அவர்கள் மறுமைதைத்தானே தேர்வுசெய்தார்கள். நீங்கள் இந்த உலக ஆட்சியில் எதனைத்தான் கண்டு கொள்வீர்கள்? நீங்கள் அல்லாஹ்வின் தூதரின் ஒரு அங்கமாகும் என உபதேசித்தார்கள். இந்த நபித்தேழரின் அனைத்து உபதேசங்களையும் புறம் தள்ளியவராக ஈராக் செல்வது என்பதில் உறுதியாகவும் இருந்தார்கள்.

அல்லாஹ்வின் விதியின்படி முஹர்ரம் 11-ல் ஒரு வெள்ளிக்கிழமை அன்று முஹர்ரம் நோன்பு நோற்றிருந்த நிலையில் மதிப்பிற்குரிய ஹுஸைன் (ரழி) அவர்களின் கொடூரக்கொலை நிகழ்வு நடந்தேறியது. இவர்களோடு இவர்களின் சகோதரர்கள் நால்வர், அலி அல்அக்பர், அப்துல்லாஹ் என்ற இரண்டு ஆண்மக்கள் கொலை செய்யப்பட்டனர். அலி அல்அஸ்கர் என்றழைக்கப்படும் **சைனுல் ஆபிதீன்** என்ற இளைய மகன் நோய் காரணமாக போரில் கலந்து கொள்ளவில்லை.

((பார்க்க: دروس ومحاضرات الشيخ صالح المغامسي ))

ஈராக்கிற்கு செல்லவேண்டாம் என உபதேசித்தவர்களில் அல்குர்ஆன் மாமேதயான அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரழி) அவர்களும், இன்னும் பல நபித்தோழர்களும் என்பது வரலாற்றில் அடங்குவர்.

ஹுஸைன் (ரழி) அவர்களின் கொலை பற்றிக் குறிப்பிடுகின்ற பல அறிஞர்களில் இப்னுகஸீர், தபரி, வாகிதி, இப்னுதைமிய்யா போன்ற அறிஞர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்களில் இப்னுதைமிய்யா அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்கள்.

யஸீத் ஹுஸைன் (ரழி) அவர்களைக் கொலை செய்யவுமில்லை, அவரது கொலை பற்றிக் கேள்விப்பட்டதும் மகிழ்ச்சி அடையவும் இல்லை. கம்பொன்றை அவரது வாயில் போட்டு குடையவுமில்லை, அவரது தலையை ஷாமுக்கு எடுத்துச் செல்லவுமில்லை.

## கர்பலாவை வந்தடைவற்கு முன்னால்

இருப்பினும் ஹுஸைன் (ரழி) அவர்களை ஈராக்கிற்கு வராது தடுக்கும்படி யஸீத் கட்டளையிட்டிருந்தார், ஆட்சி விசயமாக எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என்றும் அவர் செய்தி அனுப்பினார். இவரது ஆட்சியின் கீழ் இருந்த அஷ்ஷம்ர் பின் தில் ஜவ்ஷன் என்பவன் உபைதுல்லாஹ் பின் ஸியாதிடம் ஹுஸைனைக் கொலை செய்யும்படி தூண்டினான். உமர் பின் ஸஃத் என்பவரின் கட்டளையின் பேரில் உபைதுல்லாஹ் இந்தக் கொடூர நிகழ்வை நடத்தினான். ஹுஸைன் (ரழி) அவர்கள் தனது உறவினர்கள் பலரோடு உஸ்மான் (ரழி) அவர்களைப் போன்று அநியாயமாகக் கொலை செய்யப்பட்டார்கள்.

இது பற்றி அறிஞர் இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகின்றார்கள்.

وَكَانَ قَتْلُهُ – رَضِيَ اللَّهُ عَنْهُ – مِنْ الْمَصَائِبِ الْعَظِيمَةِ فَإِنَّ قَتْلَ الْحُسَيْنِ ، وَقَتْلَ عُثْمَانَ قَبْلَهُ : كَانَا مِنْ أَعْظَمِ أَسْبَابِ الْفِتَنِ فِي هَذِهِ الْأُمَّةِ وَقَتَلَتُهُمَا مِنْ شِرَارِ الْخَلْقِ عِنْدَ اللَّهِ . **مجموع الفتاوى - (3 / 411)**

நபித்தோழர் ஹுஸைன் (ரழி) அவர்களின் கொலையும், அதற்கு முன்னர் நடந்த உஸ்மான் (ரழி) அவர்களின் படுகொலையும் இந்த சமுதாயத்தில் பாரிய குழப்பங்கள் ஏற்படக் காரணமான நிகழ்வுகளாகும். அவ்விருவரையும் கொலை செய்தோர் அல்லாஹ்விடம் அவனது படைப்புக்களில் மிகவும் கொடியவர்களாகும்.

## கர்பலா நகரின் வாதி தீ.ஃ.ப் என்ற பள்ளத்தாக்கை ஹுஸைன் (ரழி) அவர்கள் அடைந்த போது

இந்தக்கட்டத்தில் ஹுஸைன் (ரழி) அவர்கள் தன்னை யஸீதிடம் செல்ல அனுமதிக்கும்படி அல்லது அவர்களோடு இணைந்து கொள்ள, அல்லது மக்காவிற்குத் திரும்பிச் செல்ல வேண்டி இருந்தார். அவை அனைத்தும் பலன் அற்றுப் போனது. இறுதியாக அவரைச் சிறைப்பிடிப்பது என்ற முடிவிற்கு இப்னு ஸியாத் வந்தார்.

கொலை நிகழ்வின் பின்னால் ஹுஸைன் (ரழி) அவர்களின் குடும்பம் யஸீதிடம் வந்தார்கள். அவர்களை சங்கைப்படுத்திய யஸீத் மதீனாவிற்கு கௌரவமாக அனுப்பி வைத்தார்.

ஹுஸைன் (ரழி) அவர்கள் கொலை செய்யப்படாதிருந்திருக்க வேண்டும் என்று பேசிய யஸீத் ஹுஸைன் (ரழி) அவர்களைக் கொலை செய்தவர்களைத் தண்டிக்காமல் விட்டது வரலாற்றில் ஒரு வடுவாகும். இந்தக் கடமையை யஸீத் சரியாகச் செய்யாது தவறிழைத்தது பற்றி அஹ்லுஸ்ஸுன்னாக்கள் இன்று வரை யஸீதை குறைகாணவே செய்கின்றனர்.

இதற்கு மாற்றமாக யஸீதின் விரோதிகள் அவர் மீது பல பொய்யான கதைகளை சரித்திரத்தில் சோடித்து இன்று வரை கூறி வருகின்றனர். **(பார்க்க: இப்னு தைமிய்யா. மஜ்மூ.ஃ. அல்.ஃ.பதாவா)**

**உபைதுல்லாஹ் பின் ஸியாத் ஹுஸைன் (ரழி) அவர்களின் தலையுடன் நடந்து கொண்ட முறை பற்றி அனஸ் (ரழி) அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகின்றார்கள்.**

عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ رَضِيَ اللَّهُ عَنْهُ أُتِيَ عُبَيْدُ اللَّهِ بْنُ زِيَادٍ بِرَأْسِ الْحُسَيْنِ عَلَيْهِ السَّلَام فَجُعِلَ فِي طَسْتٍ فَجَعَلَ يَنْكُتُ وَقَالَ فِي حُسْنِهِ شَيْئًا فَقَالَ أَنَسٌ كَانَ أَشْبَهَهُمْ بِرَسُولِ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ وَكَانَ مَخْضُوبًا بِالْوَسْمَةِ **((صحيح البخاري))**

உபைதுல்லாஹ் பின் ஸியாதிடம் ஹுஸைன் (ரழி) அவர்களின் தலை கொண்டுவரப்பட்டது. அவன் அதனை ஒரு தட்டில் வைத்து அவரைப் பற்றி தீய வார்த்தையால் திட்டியவனாக அதை ஒரு தடியினால் அதில் குத்திக் கொண்டிருந்தான் எனக் குறிப்பிடும். அப்போது அனஸ் (ரழி) அவர்கள் இவர் அல்லாஹ்வின் தூதருக்கு ஒப்பான உடல் அமைப்பானவரான ஹுஸைன் (ரழி) அவர்கள் (தாடி, தலை முடிகளுக்கு) மருதானி இடப்பட்ட நிலையில் இருந்தார்கள் என்றும் குறிப்பிடுகின்றார்கள். (புகாரி)

முஸ்னத் அஹ்மதில் இந்த நிகழ்வின் போது அபூ பரஸா அல்அஸ்லமி (ரழி) அவர்கள் இருந்ததாகக் இடம் பெற்றுள்ளது.

இது யஸீதிற்கும் ஹுஸைன் (ரழி) அவர்களின் தலை தொடர்பான நிகழ்விற்கும் எவ்வித சம்மந்தமும் கிடையாது என்பதை உணர்த்துகின்றது.

யஸீத் ஹுஸைன் (ரழி) அவர்களின் வாயில் குச்சியை விட்டுக் குடைந்து கொண்டிருந்தார் என்பது ஷீஆக்களின் அவதூறாகும். அனஸ் பின் மாலிக் மற்றும் அபூபரஸா அல்அஸ்லமி (ரழி) ஆகிய இருவர் முன்னிலையில் யஸீத் இந்தக் கொடுமையைப் புரிந்ததாகக் கூறுவது வெறும் பொய்யாகும். ஏனெனில் யஸீத் ஷாமில் இருந்தார், அவர் ஈராக்கில் இருக்கவில்லை. இந்த நிகழ்வு கூ∴பாவில் நடந்தாகும்.

ஹுஸைன் (ரழி) அவர்களின் தலை மதீனாவிற்கு சுமந்து செல்லப்பட்டது அங்கு அது புதைக்கப்பட்டது என்பதே சரியான கூற்றாக இருக்க முடியும். ஏனெனில் அவரது தலையைக் கண்ட பனுஹாஷிம் பெண்கள் ஒப்பாரி வைத்து அழுதார்கள். மதீனாவின் கவர்னராக இருந்த அம்று பின் ஸயீத் இந்த ஒப்பாரி சப்தம் என்ன எனக் கேட்டார். அதற்கு ஹுஸைனின் தலை கொண்டு வரப்பட்டுள்ளது என கூறப்பட்டது. உடனே அவர்

وَاللَّهِ لَوَدِدْت أَنَّ أَمِيرَ الْمُؤْمِنِينَ لَمْ يَبْعَثْ بِهِ إلَيَّ ((مجموع الفتاوى )

அமீறுல் மு∴மினீன் (யஸீத்) என்னிடம் இதை அனுப்பி வைக்காமல் இருந்திருக்க வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும் எனக் கூறினாராம். **(இப்னு தைமிய்யா. மஜ∴மூ∴ ∴பதாவா)**

**எதிரொலி:**

ஹுஸைன் (ரழி) அவர்களின் கொலையைத் தொடர்ந்து மதீனாவாசிகள் யஸீதிற்கு வழங்கிய பைஅத் உறுதி மொழியை விலக்கிக் கொண்டனர். சினம் கொண்ட யஸீத் உடனே தனது படையினை மதீனாவிற்கு அனுப்பினார். பைஅத்தைப் புதுப்பிக்க

மூன்று நாட்கள் மதீனா மக்களுக்கு அவகாசம் அளிக்கமாறும், அவர்கள் மறுக்கும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக போர் தொடுக்குமாறும் கட்டளையிட்டார் யஸீத். **(பார்க்க: இப்னு தைமிய்யா. மஜ்மூ.ஃ. அல்.ஃபதாவா)**

காலெக்கெடு முடிந்தது. முஸ்லிம்களின் வரலாற்றில் கறைபடித்த மற்றொரு ஹர்ரா என்றழைக்கப்படும் போர் ஹி: 63-ல் முஸ்லிம் பின் உக்பா அல்முர்ரி என்பவரின் தலைமையில் நடந்தேறுகின்றது. மதீனாவின் வெளிப் பகுதியில் அமைந்துள்ள இரு மலைகளுக்கிடையில் இந்தப் போர் நடந்ததன் காரணமாக ஹர்ரா என்று அழைக்கப்படுகின்றது. இதில் நபித்தோழர்கள், முஹாஜிர்கள், அன்ஸாரிகள் என பலநூறுபேர் இப்போரில் ஷஹீதானார்கள். யஸீதின் படை மதீனாவில் பாரிய அட்டூளியம் புரிந்தது, கொலை, கொள்ளை, ஏன் கற்பழிப்புகள் கூட அரங்கேறியது. இது யஸீதின் தீய பக்கங்களில் ஒன்றாகும். இந்த அக்கிரமம் யஸீதின் கட்டளையின் பேரில்தான் அரங்கேறியது.

பார்க்க: (1) **பார்க்க: இப்னு தைமிய்யா. மஜ்மூ.ஃ. அல்.ஃபதாவா**

(2) இப்னு ஹஜர் .ஃபத்ஹுல் பாரி.

கொடிய இந்த நிகழ்வின் பின்னர் யஸீதின் படை அவருக்கு பைஅத்தை விலக்கிக் கொண்ட அப்துல்லாஹ் பின் சுபைர் (ரழி) அவர்களை மக்காவில் முற்றுகையிட்டுக் கொண்டிருந்த போது ஹி: 49-ல் யஸீத் மரணித்தார்.

## யஸீத் மீதான பொய்யும் புணைப்பும் அதற்கான தெளிவும்

இஸ்லாமிய வரலாற்றில் தோன்றிய ஆட்சியாரளர்கள் தீய பக்கங்களை விடவும் நல்ல பக்கங்கள் உடையவர்களாகவே வாழ்ந்துள்ளனர். அவர்களின் தூய்மையை கெடுக்கும் நோக்கில் முஸ்லிம்களின் விரோதிகளான ஷீஆக்களால் திட்டமிட்டே பல பொய்கள் புணயைப்பட்டு பரப்பப்பட்டுள்ளன.

அல்லாஹ்வின் வேதமான அல்குர்ஆன், உம்முஹாத்துல் மு.ஃ.மனீன்களான அவர்களின் மனைவியர்கள், முதல் மூன்று கலீ.ஃ.பாக்கள், நபித்தோழர்கள் அனைவரும் இவ்வாறான விமர்சனங்களில் இருந்து ஷீஆக்களால் விடப்படவில்லை. எனும் போது யஸீத் மாத்திரம் விடப்படுவாரா என்ன?

- **ஹுஸைன் (ரழி) அவர்களைக் கொலை செய்தது யஸீதும் அவரது படையும்தான்.**

**தெளிவு:** ஹுஸைன் (ரழி) அவர்களின் கொலை தொடர்பாக யஸீதின் கவர்னராக இருந்த உபைதுல்லாஹ் பின் ஸியாத் மற்றும் ஷமர் பின் தில்ஜௌஷன், ஸினான் பின் அனஸ் அந்நுகயி போன்றவர்களின் பெயர்கள் வரலாற்றில் பதிவு செய்யப்பட்டிருப்பது போன்று அக்கால கூ∴பா வாழ் ஷீஆக்களும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளனர்.

மதீனாவில் இருந்த ஹுஸைன் (ரழி) அவர்களை கடிதங்கள் அனுப்பி பலவந்தமாக வெளியேறச் செய்து கூ∴பா வந்தடைந்ததும் அவரை அவரது குடும்பத்துடன் விட்டு விட்டு ஓடி ஒழிந்து வரலாற்றில் துரோகம் இழைத்த ஷீயாக்களே இன்று ஹுஸைன் (ரழி) அவர்களுக்காக ஆண்டுதோறும் துக்க தினம் அனுஷ்டிக்கின்றார்கள்.

இவர்கள் தன்னை ஈராக்கில் கைவிட்டுவிட்டு விலகியவர்கள் என ஹுஸைன் (ரழி) அவர்களின் பின்வரும் உரையாடல் உணர்த்துகின்றது.

ஹுஸைன் (ரழி) அவர்கள் கூ∴பாவின் தலைவர்களை பெயபர்கூறி அழைத்து எதற்கும் தயார்படுத்தப்பட்ட நிலையில் உள்ள ஒரு படைதான் நாம். ஆட்சியைக் கைப்பற்ற காலம் கனிந்துள்ளது என்று கூறி நீங்கள் என்னை அழைக்கவில்லையா? எனக் கேட்ட போது

**قالوا: لم نفعل، فقال سبحان الله بلى والله لقد فعلتم ثم قال: أيها الناس إذا كرهتموني فدعوني أنصرف عنكم إلى مأمني (( استشهاد الحسين . رضي الله عنه . بين الحقائق والأوهام – د محمد علي الصلابي (1 / 49)**

நாம் அவ்வாறு செய்யவில்லை என்றனர்! அவர் சுப்ஹானல்லாஹ் எனக்கூறி ஆச்சரியத்தை வெளிப்படுத்தியவராக அல்லாஹ்வின் மீது சத்தியமாக நீங்கள் கூறினீர்கள். ஓ மக்களே! நீங்கள் என்னை வெறுப்பதானால் என்னை விட்டு விடுங்கள் நான் பாதுகாப்பான எனது இடத்திற்கு ஒதுங்கி விடுகின்றேன் என்றாராம். (பார்க்க :

**(( استشهاد الحسين . رضي الله عنه . بين الحقائق والأوهام – د محمد علي الصلابي (1 / 49)**

கூ:.பாவாசிகள் மோசடி செய்வதில் பிரபல்யமனாவர்கள் என்று இமாம் அப்துல்காதிர் அல்பக்தாதி அவர்கள் தனது **الفرق بين الفرق** என்ற நூலில் குறிப்பிடுகின்றார்கள்.

இந்த தகவல்களின் அடிப்படையில் பார்க்கின்ற போது ஹுஸைன் (ரழி) அவர்களின் கொலைக்கும் கூ:.பாவாசிகளின் மோசடிக்கும் இடையில் நெருங்கிய உறவு காணப்படுகின்றது.

இதனை பின்வரும் நிகழ்வின் மூலம் உறுதி செய்யலாம். ஈராக் வாசிகள் சிலர் இப்னு உமர் அவர்களிடம்

இப்னு அபீ நயீம் என்பவர் குறிப்பிடுகின்றார். நான் ஒரு நாள் இப்னு உமர் அவர்களிடம் இருக்கின்ற போது ஈராக் தூதுக்கு குழுவினரில் வந்த ஒரு மனிதர் இப்னு உமர் (ரழி) அவர்களிடம் இஹ்ராம் அணிந்த நிலையில் கொசுவின் இரத்தம் பட்டால் என்ன? என்ற சட்டத்தை வினவினார். அவர்கள் நீ எந்த ஊர் என்று கேட்டார்கள். அவர் ஈராக் என்றார்.

**قَالَ انْظُرُوا إِلَى هَذَا يَسْأَلُنِي عَنْ دَمِ الْبَعُوضِ وَقَدْ قَتَلُوا ابْنَ النَّبِيِّ صلى الله عليه وسلم وَسَمِعْتُ النَّبِيَّ صلى الله عليه وسلم يَقُولُ هُمَا رَيْحَانَتَايَ مِنَ الدُّنْيَا. صحيح البخاري .**

உடனே இப்னு உமர் (ரழி) அவர்கள் இவரைப் பாருங்கள். ஆச்சரியம் கொசுவின் இரத்தம் பற்றி வினவுகின்றார், ஆனால் இவர்கள் தாம் நபியின் பேரரைப் படுகொலை செய்தவர்கள். ஹஸன், ஹுஸைன் ஆகிய இருவரும் உலகின் எனது இரண்டு அன்புச் செல்வங்கள் என நபி (ஸல்) அவர்கள் கூற நான் கேட்டுள்ளேன் என்று கூறினார்கள். (புகாரி) மற்றொரு அறிவிப்பில்:

**فقال: عجباً لكم يا أهل العراق تقتلون ابن بنت رسول الله صلى الله عليه وسلم وتسألون عن دم البعوض**

ஈராக்கியர்களே! உங்களின் புதுனம் என்ன? அல்லாஹ்வின் தூதரின் அருமைப் புதல்வியின் புதல்வனைக் கொலை செய்தீர்கள், இங்கு வந்து கொசுவின் இரத்தம் பற்றி வினவுகின்றீர்களா? எனக் கேட்டார்கள்.

ஈராக்கில் வாழ்ந்த ஷீஆக்களின் துரோகம்தான் ஹுஸைன் (ரழி) அவர்களின் கொலை என்று காலா காலம் அறியப்பட்டு வந்துள்ளது. இன்றும் முஹர்ரம் மாதம் ஷீஆக்கள் தங்களின் உடல்களை கத்தியால் குத்தி, இரத்தம் வரும் அளவு வருத்திக் கொள்வது இந்தக் கவலையை வெளிப்படுத்தவே!

● ஹுஸைன் (ரழி) அவர்களைக் கொலை செய்து அவரது வாயினுள் குச்சியைப் போட்டு குடைந்தார்.

தெளிவு: இது யஸீதின் பேரில் சொல்லப்படும் பொய்யாகும்.

இது பற்றி இமாம் இப்னு கஸீர் அவர்கள் இவ்வாறு விளக்குகின்றார்கள். ஹுஸைனின் கொலையை அனைத்துப் படைகளும் பொருந்திக் கொள்ளவில்லை. மட்டுமல்ல யஸீத் பின் முஆவியா அவர்களும் இதை விரும்பவில்லை. அதை மறுத்துப் பேசவுமில்லை. இப்னு ஸியாதை இதற்காக சாபிமிட்டார். (அல்பிதாயா)

● ஹஸைன் (ரழி) அவர்களின் தலையை சுற்றி வலம் வரச் செய்தார்.

தெளிவு: இதுவும் யஸீத் பேரில் கூறப்படுகின்ற இன்னொரு பொய்யாகும்.

● குடி போதையில் வாழ்வராகவும், தீயவராகவும் காணப்பட்டார்.

தெளிவு: இது யஸீத் பேரில் ஷீஆக்களால் திட்டமிட்டுக் கூறப்பட்ட பொய்யாகும்.

## யஸீதின் நல்ல பக்கங்கள்

ஒருவரின் தீய பக்கங்களைப் பரப்புவதால் அவரது நல்ல பகுதிகள் மறைக்கப்படுவது இயல்பாகும். அந்த வகையில் அமைந்ததுதான் யஸீத் பற்றிய நல்ல பகுதிகளும். எனவே திட்டமிட்டு விரோதிகளால் திரையிடப்பட்ட அவரது நன்மைகள் பற்றியும் நாம் அறிந்திருக்க வேண்டும். அது பற்றிய சுருக்கமே பின்னால் தரப்படுகின்றது.

### இஸ்லாமியப் போராளி

யஸீத் (ரழி) அவர்கள் இஸ்லாமிய வரலாற்றில் கொஸ்டான்டி நோபிளை வெற்றி கொள்ளவதற்காக முதலாவது படை எடுத்துச் சென்ற முதல் முஸ்லிம் படைத் தளபதியாவார். இந்த படை வீரர்கள் பற்றி நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு சான்று கூறினார்கள்.

أول جيش من أمتي يغزون البحر قد أوجبوا –أي: فعلوا فعلاً وجبت لهم به الجنة (أخرجه البخاري)

எனது உம்மத்தில் கடல் மார்க்கமாக முதலாவது போர் செய்யும் படையினர் சுவனம் கட்டாயமாக்கப்பட்டவர்கள் (புகாரி) மற்றொரு அறிவிப்பில்: அல்லாஹ்வால் பாவம் மன்னிக்கப்பட்டவர்களாக இருப்பார்கள் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்)

இது பற்றி விளக்குகின்ற இமாம் இப்னு ஹஜர் அல்அஸ்கலானி அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகின்றார்கள்.

**فِي هَذَا الْحَدِيثِ مَنْقَبَة لِمُعَاوِيَة لِأَنَّهُ أَوَّلُ مَنْ غَزَا الْبَحْرَ وَمَنْقَبَةٌ لِوَلَدِهِ يَزِيد لِأَنَّهُ أَوَّلُ مَنْ غَزَا مَدِينَةَ قَيْصَرَ ((فتح الباري لابن حجر – (9 / 89))**

இந்த ஹதீஸில் முஆவியா (ரழி) அவர்கள் பற்றிய சிறப்பு சுட்டிக்காட்டப்படுகின்றது. ஏனெனில் அவர்தான் கடல் மார்க்கமாக முதலாவது போர் செய்தவர். மேலும் அவரது புதல்வராகிய யஸீத் அவர்களின் சிறப்பும் இங்கு உள்ளடங்கி இருக்கின்றது. ஏனெனில் அவர்தான் (ரோம் மன்னன் கிஸ்ரோவின்) கைஸரின் நகர் மீது முதலாவது போர் தொடுத்தவர். அதாவது ஹி: 52- ல் (சில அறிவிப்புக்ளில் ஹி:48-ல் என இடம் பெற்றுள்ளது) யஸீதின் படைகள் கொஸ்தான்தி நோபிளை வெற்றி கொண்டது. (ஃபத்ஹுல் பாரி)

உள்நாட்டுக் கலவரங்கள் காணப்படும் பிரதேசங்களில் படை நகர்வுகளை யஸீத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் சென்றார். கிழக்கில் பல பிரதேசங்களை வெற்றி கொண்டார். ரஷ்யாவின் மாகாணங்களாகக் காணப்பட்ட குராஸான், ஸிஜிஸ்தான், ஸமர்கந்து, ஜுஹுன்தா போன்ற பிரதேசங்கைள முஸ்லிம் பின் ஸியாத் தலைமையில் யஸீதே வெற்றி கொண்டார்.

முஆவியா (ரழி) அவர்களால் பதவி நீக்கம் செய்யப்பட்ட உக்பா பின் நாஃபிஃ (ரழி) அவர்களை மீண்டும் பதவியில் அமர்த்திய யஸீத் மேற்கில் அவரது தலைமையில் ஆபிரிக்காவை நோக்கிப் பல படை நகர்வுகளை மேற்கொண்டார். தன்னை அல்லாஹ்வுக்காக விற்று விட்டதாக அறிவித்த உக்பா பின் நாஃபிஃ (ரழி) அவர்கள் போரில் முழு மூச்சுடன் செயல்பட்டதன் பயனாக ஆபிரிக்காவின் கடைசிக் கோடியில் அமையப் பெற்ற நகரமான **'பாகாயா"** நகரம் கூட வெற்றி கொள்ளப்பட்டது. அவ்வாறே ரோம், மற்றும் பர்பரிய அரசுகளை பல முறை தோல்வியுறச் செய்தார். பின்னர் ஸாப் என்று அழைக்கப்படுகின்ற ஆபிரிக்க,

ஐரோப்பிய நகரங்கள் பலவற்றை நோக்கி படைகளை நகர்த்திச் சென்று அட்லாண்டிக் கடல் வரையும் வந்தடைந்தார்.

## அஹ்லுல் பைத்தினர் ஒருவரின் சாட்சியம்

அலி (ரழி) அவர்களின் மகன் முஹம்மத் இப்னுல் ஹன.ஃபிய்யா என்பவர் யஸீத் அவர்களின் ஆதரவாளரோ, அணியில் உள்ளவரோ, அல்லது கட்சியில் உள்ளவரோ இல்லை. மாற்றமாக அஹ்லுல் பைத்தினர் பரம்பரையில் வந்தவர். யஸீத் பற்றி அவர் சொல்வதைக் கொஞ்சம் சிந்தியுங்கள்.

இப்னுஸ்ஸுபைர் (ரழி) அவர்களின் அணியில் இருந்த அப்துல்லாஹ் பின் முதீ.ஃ. (இப்னுல் முதீ.ஃ.) என்பவர் யஸீத் (ரழி) அவர்களுக்கு **பைஅத்** கொடுப்பதில் இருந்து விலக்கிக் கொள்ளும் நோக்குடன் அலி (ரழி) அவர்களின் புதல்வர்களில் ஒருவரான முஹம்மத் பின் ஹன.ஃபிய்யாவிடம் வந்த போது அதை அவர் விரும்பவில்லை. கூடாது என்று மறுத்துவிட்டார். உடனே இப்னு முதீ.ஃ. அவர்கள் யஸீத் மது அருந்துகிறார், தொழுகையைப் பேணுவதில்லை, குர்ஆனின் சட்டத்தை மீறிவிட்டார் எனக் கூறினார். இதனைக் கேட்ட அலி (ரழி) அவர்களின் புதல்வரான முஹம்மத் பின் ஹன.ஃபிய்யா (ரழி) அவர்கள்

**فقال محمد ما رأيت منه ما تذكرون ، قد حضرته و أقمت عنده فرأيته مواظباً على الصلاة متحرياً للخير يسأل عن الفقه ملازماً للسنة ، قالوا : ذلك كان منه تصنعاً لك، قال: وما الذي خاف مني أو رجا حتى يظهر إليّ الخشوع ؟ ثم أفأطلعكم على ما تذكرون من شرب الخمر ، فلئن كان أطلعكم على ذلك فإنكم لشركاؤه ، و إن لم يكن أطلعكم فما يحل لكم أن تشهدوا بما لم تعلموا ، قالوا : إنه عندنا لحق و إن لم نكن رأيناه ، فقال لهم : أبى الله ذلك على أهل الشهادة ، و لست من أمركم في شيء.**

நான் அவரோடு நேரடியாக அமர்ந்திருக்கின்றேன். நீங்கள் குறிப்பிடுகின்ற எதையும் நான் அவரிடம் அவதானிக்கவில்லை. அவர் தொழுகையில் பேணுதலானவர், நன்மையை விரும்புபவர், மார்க்க விளக்கம் பற்றி வினவுவார், சுன்னாவைப் பேணி நடப்பவர் இப்படித்தான் நான் கண்டுள்ளேன் என்றார். உடனே அவர்கள் அவர்

உமக்காக நடத்திருக்கலாம்தானே என்றனர். அது சரி அவர் எனக்கு அஞ்சி நடக்க வேண்டும் என்று அவருக்கு என்ன தேவை? நீங்கள் அவர் மது அருந்துவதாகக் கூறினால் அவரோடு நீங்களும் சேர்ந்தே அருந்தி இருக்க வேண்டும். அவ்வாறு இல்லை எனில் நீங்கள் கண்ணால் காணாததைப் பரப்புவது உங்களுக்கு ஆகுமானது அல்ல என்றார். அதற்கு அவர்கள் நாம் காணாவிட்டாலும், அது எங்களிடம் உண்மையானதுதான் என்றனர். அவ்வாறெனில் சாட்சியம் கூறுவோரின் சாட்சியமாக அல்லாஹ் அதை விரும்பவில்லை. (உங்கள் பேச்சில் எவ்வித உண்மையும் இல்லை) ஆகவே உங்கள் விஷயத்தில் எனக்கு எவ்வித தொடர்பும் இல்லை என்றார்.

**قالوا: فلعلك تكره أن يتولى الأمر غيرك؟ فنحن نوليك أمرنا قال: ما أستحل القتال على ما تريدونني عليه تابعاً ولا متبوعاً قالوا: فقد قاتلت مع أبيك، قال جيئوني بمثل أبي أقاتل على مثل ما قاتل عليه، فقالوا: فمر ابنيك أبا القاسم، والقاسم، بالقتال معنا، قال: سبحان الله. آمر الناس بما لا أفعله ولا أرضاه؟ إذن ما نصحت لله في عباده، قالوا: إذن نكرهك، قال: إذن آمر الناس بتقوى الله وألا يرضوا المخلوق بمعصية الخالق، وخرج إلى مكة) البداية و النهاية (233/8) و تاريخ الإسلام – حوادث سنة 61–80هـ – (ص274). وقد حسّن محمد الشيباني إسناده انظر مواقف المعارضة من خلافة يزيد بن معاوية (ص384).**

அவர்கள் உடனே இப்னுல் ஹனஃபிய்யாவிடம் நீங்கள் அல்லாத ஒருவர் பதவியில் இருப்பதை நீங்கள் வெறுக்கின்றீர்கள் போலும். நாம் உங்களை பதவியில் அமர்த்தட்டுமா? என்றனர். அதற்கு அவர் நான் பின்பற்றியோ, பின்பற்றப்பட்டோ போரை ஹலாலாக்கமாட்டேன் என்றார். அவர்கள் நீ உனது தந்தை அலி (ரழி) அவர்களுடன் சேர்ந்து நீர் போர் செய்தீர்தானே என்று கேட்டனர். அப்படியானால் நீங்கள் என் தந்தை போன்ற ஒருவரைக் கொண்டுவாருங்கள். அவர் போர் எதற்காகப் போர் செய்தாரோ அதற்காக நானும் போரிடுகின்றேன் என்றார். பரவாயில்லை உனது இரண்டு மகன்களான அபுல் காஸிம், காஸிம் என்ற இருவரையும் எம்மோடு போரில் கலந்து கொள்ள அனுமதிக்கலாமே என்றனர். உடனே சுப்ஹானல்லாஹ் என்று ஆச்சரியத்தை வெளிப்படுத்தி விட்டு நான் செய்யாததை மற்றவர்களுக்குச் செய்ய வேண்டும் என்று கட்டளை பிறப்பிப்பதா என்ன? எனக் கேட்டார். அப்படியானால் நீங்கள் மக்களுக்கு நல்லது செய்யப் பிரியம் இல்லாதவராச்சே. எனவே உம்மை நாம் வெறுக்கின்றோம் என்றனர். அப்படியானால் நான் மக்களுக்கு அல்லாஹ்வை அஞ்சி நடக்கும்படி ஏவுகின்றேன். படைப்பாளனுக்கு மாறு செய்யும் விஷயத்தில்

மனிதர்கள் விரும்பக்கூடாது என்றும் கட்டளையிடுகின்றேன் எனக் கூறிவிட்டு மக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

ஆதார நூல்கள்:

البداية و النهاية (233/8)

تاريخ الإسلام – حوادث سنة 61–80هـ – (ص274).

مواقف المعارضة من خلافة يزيد بن معاوية (ص384).

அஹ்லுல் பைத்தினர்களில் சிறந்த அறிஞர்களில் ஒரவரான இப்னு அப்பாஸ் (ரழி) அவர்களும் யஸீதைப் பற்றி நற்சான்று பகர்ந்துள்ளதை இமாம் البلاذري அவர்கள் தனது أنساب الأشراف என்ற நூலிலும் குறிப்பிட்டுள்ளதை வரலாற்று ஆய்வாளர்கள் ஹஸன் தரத்தில் அமைந்த ஆதராத்திற்கு கொள்ள முடியுமான செய்தி என்பதாக சுட்டிக்காட்டி உள்ளனர்.

## இமாம் பலாதிரி அவர்கள் குறிப்பிடும் மற்றொரு சம்பவம்.

**روي البلاذري أن محمد بن علي بن أبي طالب – المعروف بابن الحنفية – دخل يوماً على يزيد بن معاوية بدمشق ليودعه بعد أن قضى عنده فترة من الوقت ، فقال له يزيد ، و كان له مكرماً : يا أبا القاسم ، إن كنت رأيت مني خُلُقاً تنكره نَزَعت عنه ، و أتيت الذي تُشير به علي ؟ فقال : والله لو رأيت منكراً ما وسعني إلاّ أن أنهاك عنه ، وأخبرك بالحق لله فيه ، لما أخذ الله على أهل العلم عن أن يبينوه للناس ولا يكتموه ، وما رأيت منك إلاّ خيراً . أنساب الأشراف للبلاذري (17/5) .**

இப்னுல் ஹன.ஃ.பிய்யா என்ற பெயரில் அழைக்கப்படும் அலி (ரழி) அவர்களின் மகன் முஹம்மத் பின் அலி அவர்கள் சில காலங்கள் யஸீதிடம் தங்கிவிட்டு அவரிடம் இருந்து விடை பெற்றுச் செல்வதற்காக ஒரு நாள் யஸீதிடம் சென்றார். யஸீத் இவரை மிக மரியாதையாகவே நடத்தினார். அவரிடம் யஸீத், அபுல் காஸிம் அவர்களே! நீங்கள் என்னிடம் ஏதாவது வெறுக்கின்ற காரியத்தை கண்டால் சுட்டிக்காட்டுங்கள். அதில் இருந்து நான் விலகிக் கொள்கின்றேன், நீங்கள் கூறுவதை

நான் எடுத்து நடக்கின்றேன் என்றார். உடனே இப்னுல் ஹன.ஃபிய்யா அவர்கள் சத்தியத்தை தெளிவுபடுத்தி, அதை மறைக்கக் கூடாது என்று அல்லாஹ் அறிஞர்களிடம் எடுத்துள்ள வாக்குறுதியின் பிரகாரம் நான் அவ்வாறு கண்டிருப்பின் உடனே உம்மை அதில் இருந்து தடுத்திருப்பேன், சத்தியம் எதுவோ அதை உம்மிடம் நான் அறிவித்திருப்பேன் என்றார். பின்னர் உன்னிடம் நான் நன்மையைத்தான் கண்டுள்ளேன் என்றார். **பார்க்க: அல்அன்ஸா.ஃப்**

## யஸீத் பற்றிய அறிஞர்களின் கருத்துக்கள்

நபித்தோழரும் அறிஞருமான அபூஹுுரைரா (ரழி) அவர்கள் ஹி 60-ல் உள்ள ஆட்சியில் இருந்தும், சிறுவர்களின் தலைமைத்துவத்தில் இருந்தும் அல்லாஹ் தன்னைப் யஸீதின் ஆட்சி பற்றி பெயர் குறிப்பிடாது சிலேடையாக பாதுகாக்கும்படி பிரார்த்தனை செய்பவராக இருந்தார்கள்.

இந்தப் பிரார்த்தனை அங்கீகரிக்கப்பட்டது. ஹி: 60 முன்னால் அபூஹுுரைரா (ரழி) அவர்கள் மரணமானார்கள் என இஸ்லாமிய வரலாறு குறிப்பிடுகின்றது. இது யஸீதின் ஆட்சியில் காணப்படவிருக்கும் குழப்பங்கள் பற்றிய அபூ ஹுுரைரா (ரழி) அவர்களின் தூரப்பார்வை பற்றி மிகத் துல்லியமாக விளக்குகின்றது.

யஸீதின் ஆட்சியில் அஹ்லுல் பைத்தினரில் ஒரவரான ஹுுஸைன் (ரழி) அவர்கள் படுகொலை இஸ்லாமிய வலாற்றில் பாரிய வடுவைத் தோற்றுவித்தது என்பதை மறுக்க முடியாது.

இவ்வாறான அநியாயங்களைக் கருத்தில் கொண்டுதான் அஹ்லுஸ்ஸுுன்னா, மற்றும் சமூகத்தின் அறிஞர் பெருமக்கள்

... أَنَّهُ لَا يُسَبُّ وَلَا يُحَبُّ

இதனால்தான் அவரை ஏசவோ, திட்டவோ, (அவரது அநீதிகளை) நேசிக்கவோ கூடாது என்ற கருத்தில் உள்ளனர் என்பதாக இமாம் அஹ்மத் பின் ஹன்பல் குறிப்பிட்டதாக இமாம் இப்னுதைமிய்யா அவர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள். மற்றொரு இடத்தில்

فَيَزِيدُ عِنْدَ عُلَمَاءِ أَئِمَّةِ الْمُسْلِمِينَ مَلِكٌ مِنْ الْمُلُوكِ . لَا يُحِبُّونَهُ مَحَبَّةَ الصَّالِحِينَ وَأَوْلِيَاءِ اللَّهِ ؛ وَلَا يَسُبُّونَهُ ، فَإِنَّهُمْ لَا يُحِبُّونَ لَعْنَةَ الْمُسْلِمِ الْمُعِينِ

யஸீத் முஸ்லிம் அறிஞர்களிடம் மன்னர்களில் ஒரு மன்னராகக் கொள்ளப்படுகின்றார். அல்லாஹ்வின் நேசர்களையும், நல்லடியார்களையும் நேசிப்பது போன்று அவரை நேசிக்கவும் மாட்டார், அவரைத்திட்டவும் மாட்டார்கள். ஏனெனில் அவர்கள் ஒரு முஸ்லிமைக் குறிப்பிட்டு சாபமிடுவதை விரும்புவதும் இல்லை என்பதாக குறிப்படுகின்றார்கள். (மஜ்மூ.ஃ. ஃ.பதாவா)

இப்னு தைமிய்யா அவர்கள் மேலும் இவ்வாறு குறிப்பிடுகின்றார்கள்.

الْمُقْتَصِدُونَ مِنْ أَئِمَّةِ السَّلَفِ يَقُولُونَ فِي يَزِيدَ وَأَمْثَالِهِ : إنَّا لَا نَسُبُّهُمْ وَلَا نُحِبُّهُمْ أَيْ لَا نُحِبُ مَا صَدَرَ مِنْهُمْ مِنْ ظُلْمٍ . وَالشَّخْصُ الْوَاحِدُ يَجْتَمِعُ فِيهِ حَسَنَاتٌ وَسَيِّئَاتٌ وَطَاعَاتٌ وَمَعَاصٍ وَبِرٌّ وَفُجُورٌ وَشَرٌّ فَيُثِيبُهُ اللَّهُ عَلَى حَسَنَاتِهِ وَيُعَاقِبُهُ عَلَى سَيِّئَاتِهِ إنْ شَاءَ أَوْ يَغْفِرُ لَهُ وَيُحِبُّ مَا فَعَلَهُ مِنْ الْخَيْرِ وَيُبْغِضُ مَا فَعَلَهُ مِنْ الشَّرِّ . فَأَمَّا مَنْ كَانَتْ سَيِّئَاتُهُ صَغَائِرَ فَقَدْ وَافَقَتْ الْمُعْتَزِلَةُ عَلَى أَنَّ اللَّهَ يَغْفِرُهَا . وَأَمَّا صَاحِبُ الْكَبِيرَةِ فَسَلَفُ الْأُمَّةِ وَأَئِمَّتُهَا وَسَائِرُ أَهْلِ السُّنَّةِ وَالْجَمَاعَةِ لَا يَشْهَدُونَ لَهُ بِالنَّارِ بَلْ يُجَوِّزُونَ أَنَّ اللَّهَ يَغْفِرُ لَهُ كَمَا قَالَ تَعَالَى : { إنَّ اللَّهَ لَا يَغْفِرُ أَنْ يُشْرَكَ بِهِ وَيَغْفِرُ مَا دُونَ ذَلِكَ لِمَنْ يَشَاءُ } فَهَذِهِ فِي حَقِّ مَنْ لَمْ يُشْرِكْ فَإِنَّهُ قَيَّدَهَا بِالْمَشِيئَةِ مجموع الفتاوى – (4 / 475 )

அஹ்லுஸ்ஸுன்னாக்களில் உள்ள நடுநிலையாளர்கள் யஸீதையும் அவர் போன்றோரையும் பற்றிக் குறிப்பிடுகின்ற போது நாம் அவர்களைத் திட்டவோ, ஏசவோமாட்டோம். அவர்கள் செய்த அநீதிக்காக நாம் அவர்களை நேசிக்கவும் மாட்டோம். என்று கூறுவார்கள். ஒரு மனிதனில் நல்லவைகள், தீயவைகள், இறை வழிப்பாடு, பாவங்கள், நன்மை, தீமை, கெடுதி என அனைத்தும் சேர்ந்து காணப்படும். அவனது நன்மைக்காக அல்லாஹ் அவனுக்கு நற்கூலி வழங்குவான், அல்லாஹ் நாடினால் அவனது தீமைக்கான அவனைத் தண்டிக்கலாம், அல்லது மன்னிக்கலாம். அவன் செய்த நன்மைய அவன் நேசிப்பான், அவன் செய்த தீமையை அவன் வெறுப்பான். **சிறிய பாவங்களை அல்லாஹ் மன்னிப்பான் என்பதில் மு.ஃ.தஸிலாக்களும் சுன்னாவினருக்கு உடன்படுகின்றனர். பெரிய பாவங்கள் செய்தோரை அஹ்லுஸ்ஸுன்னாக்கள் குறிப்பிட்டு நரகவாசிகள் எனக் கூறமாட்டார்கள்.**

**மாற்றமாக அவர்கள் அதையும் தாண்டி அல்லாஹ் மன்னிப்பான் என்பார்கள். ஏனெனில் அல்லாஹ் நிச்சயமாக இணைவைப்பவர்களுக்கே மன்னிப்பதில்லை என்றும், தான் நாடினால் பிறதை (பாவங்களை) மன்னிப்பதாகவும் குறிப்பிட்டு இணைவக்காதவர்கள் மீது அல்லாஹ்வின் நாட்டத்தை வரையறை செய்து குறிப்பிடுவார்கள் எனக் குறிப்பிடும் அறிஞர் இப்னு தைமிய்யா அவர்களின் கருத்தை நவீன காலத்தில் தவ்ஹீத் பெயர்தாங்கிகள் சிந்திக்க வேண்டியவையாகும்.**

மேலதிக தகவல்களுக்கு பார்க்க:

مجموع الفتاوى

**جامع المسائل لابن تيمية**

**முஹம்மத் பின் அல்ஹன.்.பிய்யா**

இவர் அஹ்லுல் பைத்தினரில் ஒருவர். ஆனால் இவரை பன்னிரெண்டு இமாம்களில் வரிசையில் ஷீஆக்கள் சேர்த்துக் கொள்ளவில்லை என்பது முக்கியமான செய்தியாகும். யஸீத் இவரிடம் தனது குறைகளைச் சுட்டிகாட்ட வேண்டிய போது

وما رأيت منك إلاّ خيراً . أنساب الأشراف للبلاذري (17/5) .

**யஸீதை நோக்கி உம்மிடம் நான் நன்மையைத் தவிர வேறு எதையும் கண்டதில்லை என்றர். (அல்அன்ஸாப்)**

**அப்துல்லாஹ் பின் உமர் (ரழி)**

யஸீதிற்கு மக்கள் பைஅத் கொடுத்தில் இருந்து விலக்கிக் கொள்ள வேண்டும் என்ற கருத்தை மதீனாவில் மக்கள் முன்னெடுத்த போதும், கவாரிஜ்களின் முக்கிய தலைவர்களில் ஒருவரான இப்னு முதீ.். என்பவர் மதீனாவில் பிரச்சாரத்தில் ஈடுபட்ட போதும் அதனை விரும்பாத **அப்துல்லாஹ் பின் உமர் (ரழி) அவர்கள் தனது உறவினர்களையும் பிள்ளைகளையும் அழைத்து**

"إني سمعت النبي صلى الله عليه وسلم يقول: (ينصب لكل غادر لواء يوم القيامة)

**“பைஅத் மோசடி செய்யும் ஒவ்வொருவனுக்கும் மறுமையில் அடையாளக் கொடி ஒன்று நடப்படும்”** என நபி (ஸல்) அவர்கள் கூறியதை தான் செவிமடுத்ததாகக் அவர்களிடம் குறிப்பிட்டு விட்டு பின்வருமாறு எச்சரித்துள்ளார்கள்.

**وإنا قد بايعنا هذا الرجل على بيع الله ورسوله، وإني لا أعلم غدراً أعظم من أن يبايع رجل على بيع الله ورسوله ثم ينصب له القتال، وإني لا أعلم أحداً منكم خلعه، ولا تابع في هذا الأمر، إلا كانت الفيصل بيني وبينه".**

நிச்சயமாக நாம் இந்த மனிதனுக்கு (யஸீதுக்கு) அல்லாஹ்வையும், அவன் தூதரையும் முன் நிறுத்தி பைஅத் வழங்கிவிட்டோம். அல்லாஹ்வையும், அவன் தூதரையும் முன் நிறுத்தி பைஅத் வழங்கி, பின்னர் செய்யப்படும் மோசடியை விட மோசமான ஒன்றை நான் அறியமாட்டேன். உங்களில் யாவராது இவருக்கு பைஅத் மோசடி செய்ததாகவோ, அல்லது அதைப் பற்றி அலட்டிக் கொள்வதாகவோ நான் அறிந்தால் எனக்கும் அந்த மனிதருக்கும் இடையில் தீர்க்கமான நிலைப்பாடுதான் (பிரிவினைதான்) தீர்வாக அமையும் என்று எச்சரித்ததாக இமாம் புகாரியின் அறிவிப்பில் காணப்படுகின்றது.

## இஹ்யாவின் ஆசிரியர் இமாம் கஸ்ஸாலி (ரஹ்)

இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்களிடம் பாவம் செய்யும், குறிப்பிட்ட ஒருவரை சபிப்பது பற்றி வினவிப்பட்டட போது ஷைத்தானேயே குறிப்பிட்டு சபிக்கக் கூடாது என்றிருக்கின்ற போது பாவம் செய்த முஸ்லிம்களை எப்படி சபிக்கலாம் எனக் கேட்விட்டு பின்வருமாறு கூறினார்கள்.

**وقال الغزالي – رحمه الله – : فإن قيل هل يجوز لعن يزيد لأنه قاتل الحسين أو آمر به قلنا هذا لم يثبت أصلا فلا يجوز أن يقال إنه قتله أو أمر به ما لم يثبت فضلا عن اللعنة لأنه لا تجوز نسبة مسلم إلى كبيرة من غير تحقيق ((إحياء علوم الدين بيان عظيم خطر اللسان وفضيلة الصمت – (3 / 125)**

யஸீதை சபிக்கலமா? அவர் ஹுஸைனைக் கொலை செய்தவர், அல்லது அதற்குத் தூண்டியவர் என்று கேட்கப்பட்டால்? இது அடிப்படையில் உறுதி செய்யப்பட்டது அல்ல. ஆகவே அவர் (யஸீத்) அவரைக் கொலை செய்தார் என்றோ, அல்லது அதற்குத் தூண்டினார் என்றோ ஆதாரமில்லாததைக் குறிப்பிட முடியாது என்றிருக்கின்ற போது சபிப்பது கூடுமா? எந்த ஒரு முஸ்லிமின் பக்கமும் பெரும்பாவத்தை இணைத்துப் பேசுவது கூடவே கூடாது. இந்தப் பதிவை இமாம் அவர்களின் இஹ்யா என்ற நூலில் காண முடியும்.

**முடிவுரை:**

யஸீத் தாபியீன் காலத்து மனிதர்களில் ஒருவர். அவரது காலம் சிறந்த மூன்று நூற்றாண்டுகள் என வர்ணிக்கப்பட்ட நூற்றாண்டில் உள்ளடங்கி இருக்கின்றது. **கைஸரின் நகர் மீது போர் தொடுக்கும் போராளிக் குழுக்கள் அல்லாஹ்வின் மன்னிப்பை பெற்றவர்கள்** என்ற நபிமொழிக்கு அமைய யஸீத் பாவம் மன்னிக்கப்பட்டவராக மாறலாம். ஏனெனில் அவரும், அவரது தந்தையுமான முஆவியா (ரழி) அவர்களும்தான் இந்த நகர் மீது முதலாவது படை எடுத்துச் சென்ற முஸ்லிம் படையாகும்.

ஒரு மனிதனது நன்மை, தீமை என்ற இரு பக்கங்களில் யஸீதின் நன்மைகள் அவரது பாவத்தை அழிக்கலாம் என்பது அஹ்லுஸ்ஸுன்னாக்களாகிய நமது நிலைப்பாடாகும். இவர் மீது காழ்ப்புணரச்சி கொண்டு வசைபாடும் ஷீஆக்கள் ஷஹீத் என்று முன்னறிவிப்புச் செய்யப்பட்டவர்களான உமர் மற்றும் உஸ்மான் (ரழி) போன்றோரின் கொலையாளிகள் பற்றியோ ஏன் அலி (ரழி) அவர்களின் கொலையாளியான கொடியவன் இப்னுல் முல்ஜிம் பற்றியோ எதையும் பேசுவதில்லை. அதுமட்டுமின்றி உமர் (ரழி) அவர்களைக் கொலை செய்த நரகவாதியான **அபூலுஃலா** என்பனுக்கு சமாதி கட்டி மரியாதையாக அவனை வழிபடுகின்றனர். இது ஆரோக்கியமான ஒரு போக்கு அல்ல என்பதே நமது பார்வை. மட்டுமின்ற ஸஹாபாக்கள் மீதான ஷீஆக்களின் பார்வை எவ்வாறானது என்பதையும் இது படம்பிடித்துக் காட்டுகின்றது.

**மரணம்:** யஸீத் அவர்கள் ஹி: 64-ல் மரணித்தார்கள் என்று வரலாற்று ஆசிரியர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**அல்லாஹ் நமது தீமைகளைப் பொறுத்து நல்லமல்களை அங்கீரித்து அருள் செய்வானாக!**

**المصادر والمراجع:**


**يزيد بن معاوية، شيء من سيرته د. طه الدليمي**

**جامع المسائل لابن تيمية – عزير شمس –**

**فقه الدعوة في صحيح الإمام البخاري**

**مجموع مؤلفات عقائد الرافضة والرد عليها**

**إحياء علوم الدين للإمام الغزالي**

**أنساب الأشراف للبلاذري**

**البداية والنهاية لابن كثير**